Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 06 (21-12 1991) சனிக்கிழமை ஓசை: 306

## தடுக்கக் கூடிய நோய்களால் 2,50000 சிறுவர் வாராந்தம் பலி

தடுக்கக் கூடிய நோய்களால் வாராந்தம் இரண்டுலட்சத்து ஐம்பதாயிரம் சிறுவர்கள் இறந்து வருகிறார்கள், இதே வேளை ஏனைய லட்சக் கணக்கான சிறுவர்கள் போஷாக்கின்மை, யுத்தம், நோய் போன்றவற்றினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று யூனிசெப் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. யூனிசெப் ஸ்தாபனம் நேற்று முன்தினம் வெளியிட்ட அதன் அறிக்கை யொன்றில் மேலும், சிறுவர்களின் நிலைபற்றி விசேடமாக குறிப்பிட்டுள்ளது. யூனிசெப் ஸ்தாபனம் அதன் (3 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை அழிக்கும் ஆபத்தான திட்டம்:

# தொண்டா மீது பௌத்த பீடம் சீற்றம்

## சிங்களவரைவிழிப்புடன் இருக்ககோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினை சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான் முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்டமானது நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் அழித்துவிடும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டிருப்பதாக ஒரு பௌத்த நிறுவனம சிங்கள மக்களை எச்சரித்துள்ளது. சிறிலங்காவின் பௌத்த விவகார கண்காணிப்பு குழுவில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தப் பௌத்த சங்கம் நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தொண்டமானின் திட்டத்தை தமிழீழ தனியரசுடன் ஒப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: அமைச்சர் தொண்டமான் தமிழீழத்தை அமைப்பது பற்றிய திட்டம் எதையும் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை ஆனால் நாட்டில் அரசியல் ஸ்திர நிலையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து ஆலோசனை தெரிவிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் தொண்டமான் சமர்ப்பித்த திட்டத்தை ஆராயும் போது—

வடக்கையும், கிழக்கையும், இணைத்தல், அதற்கென ஒரு மாகாணசபை, திருக்கோணமலைத் துறைமுகத்தையும், மற்றும் வழிகளையும் பொறுப்பேற்றல். வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் அதிகாரம், வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறுதல், பொலிஸ் அமைப்பிலுள்ளவர்களை பொலிஸிலும் படைகளிலும் சேர்த்தல், நிலம் தொடர்பான விடயங்களில் சுயேச்சையாக முடிவுகளை எடுத்தல் என்பன நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### சுஜே

ஆனையிறவுப் பகுதியில் 20-07-91 அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை சுஜே (பெருமாள் பானுமதி, காங்கேசன்துறை) 19-12-91 இல் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## வவுனியா. எறிகணை வீச்சு; வீடுகள் சேதம்; பலர் கைது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல வீடுகள் சேதமடைந்துள்ளன. நேற்று முன்தினம் பிற்பகலில் வவுனியா, போயாடி கூழாங்குளம் பகுதியிலிருக்கும் இராணுவ காவலரண் பகுதியிலிருந்தே இவ் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது ஒருமணி நேரம் தொடர்ந்து நடத்தப்பட்ட இவ் எறிகணைத் தாக்குதலையடுத்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பட்டாணிச்சூர் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் கிராமவாசிகள் ஏழுபேரைக் கைது செய்துள்ளனர்.

## நஷ்டஈடு இப்போதைக்கு இல்லை

வளைகுடா யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய இலங்கைத் தொழி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பு; முஸ்லிம் காங்கிரஸ் நிராகரிப்பு

(கொழும்பு)

நிரந்தரமற்ற வடக்கு, கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் நிராகரிக்கின்றது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று கொழும்பில் விடுத்த அறிக்கையில் அவர், அஷ்ரப் தொண்டமானின் திட்டத்தில் முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாகத் தனியானதொரு அதிகாரமும் ...

## புலிகளுடன் பேச்சுவார்த்தை

## ஹங்கேரியில் பிடிபட்ட கடத்தல் ஆயுதங்கள் குறித்து சிறிலங்கா அதிகாரிகள் மௌனம்

ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டில் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சிலியிலிருந்து சிறிலங்காவுக்கு அனுப்பப்பட்டவை அல்லது சிறிலங்காவின் பெயரில் யூகோஸ்லாவியாவுக்கு அனுப்பப்பட்டவை என்பது இன்றுவரை தெளிவாகவில்லை. இது குறித்து சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மௌனம் சாதிக்கின்றனர்.

வெளிவிவகார ஆணையாளர் நிஹால் றொட்றிகோ சிலிக்கும் சிறிலங்காவுக்கும் ஆயுத வியாபாரத் தொடர்பில்லை என்றார். ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மென் வீரக்கோன் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்க மறுத்தார்.

ஹங்கேரி செய்திஸ்தாபனமான எம் ரி ஐ செய்தியின் படி, டிசம்பர் 7 ஆம் திகதி மேற்படி ஆயுதங்கள் விமானத்திலிருந்து இறக்கப்பட்டு டிறக்குகளில் ஏற்றும்போது கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. ஆயுதப் பொதிகள் யூகோஸ்லாவியாவுக்கு எடுத்துச் செல்லப்பட இருந்தன ...

## புலிகள் ...

# சிங்களவரைவிழிப்புடன் இருக்ககோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினை சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான் முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்டமானது நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் அழித்துவிடும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டிருப்பதாக ஒரு பௌத்த நிறுவனம சிங்கள மக்களை எச்சரித்துள்ளது. சிறிலங்காவின் பௌத்த விவகார கண்காணிப்பு குழுவில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தப் பௌத்த சங்கம் நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தொண்டமானின் திட்டத்தை தமிழீழ தனியரசுடன் ஒப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: அமைச்சர் தொண்டமான் தமிழீழத்தை அமைப்பது பற்றிய திட்டம் எதையும் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை ஆனால் நாட்டில் அரசியல் ஸ்திர நிலையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து ஆலோசனை தெரிவிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் தொண்டமான் சமர்ப்பித்த திட்டத்தை ஆராயும் போது—

வடக்கையும், கிழக்கையும், இணைத்தல், அதற்கென ஒரு மாகாணசபை, திருகோணமலைத் துறைமுகத்தையும், மற்றும் வழிகளையும் பொறுப்பேற்றல். வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் அதிகாரம், வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறுதல். பொலிஸ் அமைப்பிலும் இவர்களை பொலிஸிலும் படைகளிலும் சேர்த்தல், நிலம் தொடர்பான விடயங்களில் சுயேச்சையாக முடிவுகளை எடுத்தல் என்பன நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்று

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு இணைப்பு; முஸ்லிம் காங்கிரஸ் நிராகரிப்பு

(கொழும்பு)

நிபந்தனையற்ற வடக்கு, கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் நிராகரிக்கின்றது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் விடுத்த அறிக்கையொன்றில்குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று கொழும்பில் விடுத்த அறிக்கையில் திரு. அஷ்ரப் தொண்டமானின் திட்டத்தில் முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக தனியானதொரு அத்தியாயம் உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். முஸ்லிம்களின் அபிலாஷைகளையும், அரசியல்ரீதியாக முஸ்லிம்கள் தனித்துவமான பிரிவினர் என்பதனையும் தொண்டமான் அங்கீகரித்திருப்பதுவரவேற்கப்படவேண்டியது எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்குப் பிராந்திய சுயாட்சியின் கீழ் முஸ்லிம் சிறுபான்மையினருக்கானவையும், சமமதையான அதிகாரத்தை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். பிராந்திய சுயாட்சியின் கீழ் முதலமைச்சர் இருப்பதுபோல முஸ்லிம்களின் வசய அதிகார

(3 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன்பேச்சுவார்த்தை சிந்திக்க வேண்டியது

## அத்தாவுட செனிவரத்தினா

(கொழும்பு)

அயல் நாட்டின் பிரதம மந்திரியை கொல்ல உத்தரவிட்ட விடுதலைப் புலிகளோடு பேசி நட்புப் பாராட்ட எடுக்கப்படும் முயற்சி குறித்து கவனமாக சிந்திக்க வேண்டும் என ஐக்கிய சோசலிச எம்.பி. அத்தாவுட செனிவரத்தினா குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில், அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்

(3ஆம் பக்கம் பார்க்க)

# 1992 நிதி ஒதுக்கீடு சட்டமூலம் நிறைவேறியது

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் 57 அதிகப்படியான வாக்குகள் பெற்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

இதற்கு ஆதரவாக 124 பாராளுமன்ற உறுப்பினர்களும், எதிராக 67 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஆதரவாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள், வடக்குக் கிழக்கு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த இரண்டு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஊவாவில் 80 தமிழர் தேடப்படுகின்றனராம்

ஊவா மாகாணத்தில் பயங்கரவாதத்தோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்படும் எண்பது தமிழர்களின் பெயர்ப் பட்டியல் பொலிஸாரிடம் உள்ளதாகவும் இவர்கள் அனைவரையும் தமிழ்ச் சமூகங்கள் ஊவா மாகாண முதலமைச்சர் சுருக்கூடாக தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் பொலிசார் கேட்டுள்ளனர்.

இதுவரை சந்தேகத்தின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு

## சுஜே

ஆனையிறவு பகுதியில் 20-07-91 அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை சுஜே (பெருமாள் பானுமதி, காங்கேசன்துறை) 19-12-91 இல் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# வவுனியா. எறிகணை வீச்சு; வீடுகள் சேதம்; பலர் கைது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல வீடுகள் சேதமடைந்துள்ளன. நேற்று முன்தினம் பிற்பகலில் வவுனியா, கோயடிகூழ மிகுளம் பகுதியிலிருக்கும் இராணுவ காவலரண் பகுதியிலிருந்தே இவ் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது ஒருமணி நேரம் தொடர்ந்து நடத்தப்பட்ட இவ் எறிகணைத் தாக்குதலையடுத்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பட்டாணிச்சூர் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் கிராமவாசிகள் ஏழுபேரைக் கைது செய்துள்ளனர்.

# நஷ்டஈடு இப்போதைக்கு இல்லை

வளைகுடா யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய இலங்கைத் தொழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஹங்கேரியில் பிடிபட்ட

# கடத்தல் ஆயுதங்கள் குறித்து சிறிலங்கா அதிகாரிகள் மௌனம்

ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ற்றில் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சிலியிலிருந்து சிறிலங்காவுக்கு அனுப்பப்பட்டவை அல்லது சிறிலங்காவின் வெளிநாட்டு கோரேசியாவுக்கு அனுப்பப்பட்டவைய என்பது இன்றுவரை தெளிவாகவில்லை இது குறித்து சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மௌனம் சாதிக்கின்றன.

வெளிவிவகார ஆணையாளர் நிகால் றொட்றிக்கோ சிலிக்கும் சிறிலங்காவுக்கும் ஆயுத வியாபாரத் தொடர்பில்லை என்றார். ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மென் வீரக்கோன் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்க மறுத்தார்.

ஹங்கேரி செய்திஸ்தானமான எம் ரி ஐ செய்தியின் படி, டிசம்பர் 7 ஆம் திகதி மேற்படி ஆயுதங்கள் விமானத்திலிருந்து இறக்கப்பட்டு டிறக்குகளில் ஏற்றும்போது கைப்பற்றப்பட்டன என்றுதெரிவிக்கப்படுகிறது. ஆயுதப் பொதிகள் யூகோஸ்லாவியாவுக்ு எடுத்துச் செல்லப்பட இருந்தன என்றும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவுக்கு விற்பதற்கு என அதிகாரமளிக்கப்பட்ட ஆயுதங்கள் தான் யூகோஸ்லாவியில் குரோஷியப் படைகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் குறிபார்த்துச் சூடு; பத்தமேனியில் 4 படை பலி

(சுதை நிருபர்)

பலாலி இராணுவ முகாமின் பத்தமேனிப் பகுதியிலிருக்கும் இராணுவக் காவலரணை நோக்கி விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை பத்தரை மணியளவில் காவலரணில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறிலங்காஇராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் குறி பார்த்துச் சுட்டதில் நான்கு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர்

இவ்வாறான நடந்த தாக்குதல்களில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பலாலிப் பகுதியில் முப்பத்தொரு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர்

# கொழும்பில் இன்று சார்க் மாநாடு

(கொழும்பு)

ஆறாவது சார்க் உச்சி மாநாடு இன்று காலை பத்து முப்பது மணிக்குப் பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகியநாடுகளின் தலைவர்கள் ஏற்கனவே கொழும்பு வந்துள்ளனர்.

இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் தூதுக்குழுவிற்குதலைமை தாங்கி நேற்றிரவு புதுடில்லியிலிருந்து புறப்பட்டுவிட்டார் எனினும் அவர் இரவைக் கோவாவில் கழித்துவிட்டு இன்று காலை எட்டு நாற்பத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தைப் பொங்கலுடன் தொண்டா யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

தாம் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத்தெரியவருகிறது. யாழ்ப்பாணம் வரவிருக்கும் திரு. தொண்டமான் இங்கு இரண்டு அல்லது மூன்று தினங்கள் தங்கியிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் ஆரம்ப பேச்சுகளை நடாத்தவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# மாகியப்பிட்டி ஹெலி தாக்கு; இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியிலிருந்து ஹெலிபர் தாக்குதல் நடத்தியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்

நேற்று மாலை 5-00 மணியளவில் மேற்படி பகுதிகளில் சரமாரியாக நடாத்தப்பட்ட ஹெலிபர் தாக்குதலில் எஸ். ரஞ்சன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தென் கொரியாவில் வேலைவாய்ப்பு இல்லை

## —தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

தென் கொரியாவில் வேலை வாய்ப்பு இல்லை என கொழும்பிலுள்ள தென் கொரிய தூதரகம் எச்சரிக்கை செய்துள்ளது.

தென் கொரியாவில் வேலை பெற்றுத் தருவதாகப் பொய் உறுதி அளித்துப் பெருந் தொகையான பணம் மோசடி செய்யப்பட்டமை பற்றி கொழும்பிலுள்ள கொரிய குடியரசு தூதரகம் அறிவித்துள்ளது.

இப்படி ஏமாற்றப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கொரியாவிற்கு அனுப்புவதாகக் கூறி வேறு நாடுகளுக்கு அனுப்பி விடப்பட்டு மீண்டும் இலங்கை திரும்புகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தூதரகம் தெரிவித்தது.

அத்துடன் கொரிய அரசாங்கத்தின் அனுமதியின்றி கொரியகுடியரசில் வெளிநாட்டவர்கள் எவரும் வேலைபார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கொரியாவில் வேலைகள் இருப்பதாக ஆசை வார்த்தை காட்டி பணம் பறிக்கும் போலி தொழில் முகவர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறும் தூதரகம் கேட்டுள்ளது.

---

மில்க்வைற் தொழிலக

## அறிவித்தல்

சவர்க்கார உற்பத்திக்கு அத்தியாவசிய பிரதம மூலப் பொருளான கோஸ்ரிக்சோடா பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தினால் தொழிலகம் பிற்பகல் 12 30 மணிவரை மட்டுமே இயங்குகிறது.

தொழிலகத்துடன் தொடர்பு கொள்வோரை இவ்வேளை நேர மாற்றத்தைக் கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

அதிபர்
மில்க்வைற் தொழிலகம்

(B/367–)

---

### வரி விளம்பரம்

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L, A/L Short hand - Typing இரு மொழிகளிலும் Spoken English I. A B புதிய பிரிவு ஆரம்பம் 23-12-91 (B/3673)

---

# கெரோயினுடன் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை லங்கா எனும் இடத்தில் இரண்டு லட்ச ரூபா பெறுமதியான கெரோயின் போதை பொருளுடன் இளைஞர் ஒருவரை பொலிசார் பிடித்துள்ளனர்.

பிடிபட்ட இளைஞர் தொலைக்காட்சி பெட்டியும் பொருத்திய ஆடம்பர காரொன்றில் பயணம் செய்து கொண்டிருந்தார்; இதே வேளை கடந்த வாரமளவில் கொழும்பில் மேலும் இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

---

எவர்சில்வர், பிளாஸ்ரிக், அலுமினியம், பித்தளை,
கண்ணாடிப்பாத்திரங்களைப் பளிச்சிடத் துலக்க
நீம்
ஓர் ஒப்பற்ற துலக்கும் சாதனம், வேம்பின் ஆதாரம்.
'மில்க்வைற் உற்பத்தி'
'உதயம்' பல்பொருள் அங்காடிக் கடைகளிலும் விற்பனையாகின்றது
(B/3666)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
SPOKEN ENGLISH BY BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்:- 21-12-1991
(காலை 8-00 மணி)
A/L 91
வினா - விடை வகுப்பு
பொருளியல்:- குமாரவேல்
21-12-91
(மாலை 4-00 மணி)
(B/3670)

---

# நினைவு கூருகின்றோம்...

1991-12-21



மேஜர் அல்பேட்

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ தோழன் (சோ. பாலச்சந்திரன் - கட்டைபறிச்சான், திருக்கோணமலை)

★ பழம் (தவராசா - சம்பூர், திருக்கோணமலை)

1985 ஆம் ஆண்டு சுதுமலையில் எமது முகாம் ஒன்றை உடுவில் மானிப்பாய் வீதிகளில் வந்த சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

மேஜர் அல்பேட் (சந்திரபாலா ரூபநிதி - ரூபநிதி வீதி, அச்சுவேலி தெற்கு)

1987 ஆம் ஆண்டு புளியங்கூடலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய

லெப். சாந்தன் (மா செல்வின் தேவராஜ் - 11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

அப்ஸ் (க. ரவீந்திரன் - புளியங்கூடல் ஊர்காவற்றுறை)

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

நாகரட்ணம் சிவசங்கர் (தெல்லிப்பளை)

1988 ஆம் ஆண்டு மலையகம், அட்டன் பகுதியில் ஜே. வி. பி. இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழ் இளைஞர்கள்

1990 ஆம் ஆண்டு மன்னார், கொண்டச்சிப்பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

---

ஸ்ரீதர் திரையரங்கில்
அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

---

1992 ஆம் ஆண்டிற்கான
மாணவர்களை சேர்த்தல் பற்றிய

## அறிவுறுத்தல்கள்

5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான

இயல்பு காரணங்களினால் தொழிலகம் பிற்பகல் 12 30 மணிவரை மட்டுமே இயங்குகிறது.

தொழிலகத்துடன் தொடர்பு கொள்பவர்கள் இவ்வேளை நேர மாற்றத்தைக் கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

அதிபர்

(B/367 )

மில்க்வைற் தொழிலகம்

வேளை கடந்த வாரமளவில் கொழும்பில் மேலும் இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

1992 ஆம் ஆண்டிற்கான

மாணவர்களை சேர்த்தல் பற்றிய

## அறிவுறுத்தல்கள்

5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான

புதிய பிரிவுகள் யாவும் 05 01-1992 ஞாயிறு ஆரம்பமாகின்றன

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தமகன் அனுமதியை முன்கூட்டியே உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரத்தில் எமது நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| ஆண்டு | காலம் | நேரம் |
|---|---|---|
| 5 | 23 12-1991 | காலை 7-30 மணி |
| 6 | ,, | காலை 8-30 ,, |
| 7 | ,, | மு. ப. 9-30 ,, |
| 8 | ,, | ,, 10 30 ,, |
| 9 | ,, | ,, 11-30 ,, |
| 10 | ,, | பி. ப. 2-30 ,, |
| 11 | ,, | பி. ப. 3-30 ,, |

வகுப்புகள் யாவும் மாணவர்களின் வசதிக்கு ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக நடாத்தப்படும். நேர சூசிகைகள் 23-12-91 அன்று வழங்கப்படும்.

க. பொ. த. உயர்தரம் 93 ஆம் ஆண்டிற்கான

கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்

புதிய வகுப்புக்கள் யாவும் 21-12-91 (சனி) ஆரம்பமாகும்

கலை, வர்த்தகப் பிரிவு: 21-12-91 காலை 6-15 மணி

விஞ்ஞான பிரிவு: ,, பி. ப. 2-30

(கணிதம் உயிரியல்)

அதிபர்

யூனிவேர்சல்

(B/3663) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# நினைவு கூருகின்றோம்...



1991 - 12 - 21

மேஜர் அல்பேட்

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ தோழன் (சோ. பாலச்சந்திரன் - கப்பேடைபறிச்சான், திருக்கோணமலை)

★ பழம் (தவராசா - சம்பூர், திருக்கோணமலை)

1985 ஆம் ஆண்டு சுதுமலையில் எமது முகாம் ஒன்றை உளவுதுளாளூர்திகளில் வந்த சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

மேஜர் அல்பேட் (சந்தையா குமாரநிதி - குமாரநிதி வீதி, அச்சுவேலி தெற்கு)

1987 ஆம் ஆண்டு புளியங்கூடலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய

லெப். சாந்தன் (மா செல்லையா தேவராஜ் - 11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

அப்ஸ் (க. ரவீந்திரன் - புளியங்கூடல் ஊர்காவற்றுறை)

கொழும்பு. வெள்ளவத்தைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

நாகரட்ணம் சிவசங்கர் (தெல்லிப்பழை)

1988 ஆம் ஆண்டு மலையகம், அப்புத்தளைப் பகுதியில் ஜே. வி. பி, இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழ் இளைஞர்கள்

1990 ஆம் ஆண்டு மன்னார், கொண்டச்சிப்பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

லெப். ஜோதிரவி (பொன்னுச்சாமி சக்திவேல் - இலுப்பைக்கடவைக்குளம் நானாட்டான், மன்னார்)

சங்கிலியன் (சவரிப்பிள்ளை சகாயராசா (மொறிஸ்) - வங்காலைக்கோட்டை, நானாட்டான், மன்னார்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

வேந்தன் (குடைக்கலம் முத்துக்குமார் - உடையார்கட்டு, முல்லைத்தீவு)

மருதமடுவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

லெப். சசி | சசியம் இராசமணி குபேந்திரன் - தேத்தான்குளம், மாந்தை, மன்னார்)

கட்டுவனில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த

சரிதா (ஜோதிலட்சுமி இராசையா - செம்மலை, அளம்பில், மணலாறு)

கொக்குத்தொடுவாயில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த

சிக்கோ (சிவலிங்கம் தெய்வேந்திரன் - கிரான், மட்டக்களப்பு)

கரம்பனில் சிறிலங்கா இராணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்ட அவரது கத்தியாலேயே வெட்டிக்கொல்லப்பட்ட தமிழ்ச் சிவற்றொழிலாளி

அம்பாறையில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற் குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

(B/3668) விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

## சிந்தனைக்கு

நாம் சமாளிக்க வேண்டிய தடைகள் பற்றிய உணர்வே, அரிய சாதனைகளுக்காக நாம் முயல, மூல உந்துதலாக அமைகிறது.

— வில்லியம்ஹேஸ்லிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 21-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# தொண்டமானின் சமரச திட்டம் !!

இ. தொ. காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் முக்கியமான அம்சங்களில் ஒன்று சுயாட்சி அமைப்பு-தன்னாட்சி அமைப்பு- (INSTITUTION FOR AUTONOMY) என்பதாகும்.

இந்நகல் திட்டத்தின் முன்னுரையில், சுயாட்சி அமைப்பு என்ற வாசகம் ஒரு தற்காலிக ஏற்பாடாகும்: பிரதேசசபை, மாகாண சபை, மாகாண அரசு, மண்டல சபை என எந்தப் பெயர் கொண்டும் அழைக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு தொண்டமான் குறிப்பிட்டுள்ளது போல் பெயர் எவ்வாறு இருப்பினும், அது முக்கிய விவகாரம் அல்ல என்பது எல்லோருடைய வாதம் ஆகும் இதனால், இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்டம் என்று குழப்பமடைவதும் விருப்பத்துக்கு ஒன்றில்லைத்தான். ஆனால், சுயாட்சி அமைப்பு என்ற கவர்ச்சியான சொற் பிரயோகத்தை மட்டும் முன்வைத்து அரசியல் அமைப்பு ரீதியான மாற்றம் எதுவும் இல்லாமல், இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது.

அதாவது திரு. தொண்டமானின் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சுயாட்சி அமைப்பு ஒற்றையாட்சி அமைப்பு முறைக்குள் உட்பட்டதா, அல்லது சமஷ்டி ஆட்சி முறைக்குள் உட்பட்டதா என்பதை அவர் தனது தீர்வுத்திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடவில்லை. 'சுயாட்சி அமைப்பு' என்பது பொதுப்படையாக சமஷ்டி அமைப்பு முறையில் அடங்குவது தான். ஆனால் இதை சிறிலங்கா ஏற்றுக் கொள்ளும் என்றோ, அல்லது தீர்வுத்திட்டத்தில் குறிப்பிடாத ஒன்றைப் பற்றி நாம் முடிவிற்கு வருவதோ தவறானதாகும்.

ஏனெனில், அமைச்சர் தொண்டமான் தனது தீர்வுத்திட்டத்தில் குறிப்பிடும் போது மாகாண சபை உருவாக்கப்பட்டும் அவற்றிற்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை ஆகையினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வலுவுள்ள சக்தியுள்ள சுயாட்சி அமைப்பு ஒன்றை நிறுவ அதற்கு வகை செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது தற்பொழுது வடக்கு கிழக்கில் செயலிழந்துள்ள மாகாண சபையை ஒப்பிட்டே திரு தொண்டமான் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இம் மாகாணசபை, இலங்கையில் உள்ள ஒற்றையாட்சி அமைப்பிற்கு உட்பட்டதாகவே உள்ளது 1987இல், இம்மாகாண சபை உருவாக்கப்பட்டபோது இந்த விடயத்தில் சிறிலங்கா மிகுந்த அக்கறையாக இருந்தது. தற்பொழுதும் ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என சிறிலங்கா வற்புறுத்தியும் வருகின்றது இலங்கையில் சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்குதல் என்பது தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பது போல் ஆகும் என சிங்களப் பேரினவாத சக்திகள் கருதுகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் தனிநாடு ஒன்றிற்காகப் போராடி வருகின்றார்கள். அதற்காகப் பல்லாயிரக் கணக்கான மக்களையும் பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களையும் இழந்துள்ளனர். ஆனால், போராட்டத்தைக் கைவிடவில்லை போராடத் தயாராக உள்ளனர். இனப் பிரச்சினையைத் தீர்ப்பதானால் தமிழ் மக்களிற்கு மாற்றீடான திட்டமொன்றைப் பரிசீலிக்க விரும்புகின்றார்கள். இந்நிலையில், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒற்றையாட்சி அமைப்பொன்றை 'சுயாட்சி அமைப்பு' என்ற ரீதியில் எவ்வாறு அவர்களால் ஏற்க முடியும்?

ஆனால், திரு தொண்டமான் நகல் தீர்வுத் திட்டத்திற்கு அப்பால், கருத்துக்கள் வெளியிடுகையில் உயர் அதிகாரங்கள் கொண்ட சமஷ்டி அமைப்பு முறை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். கனடா, சுவிஸ் முறைகள் பற்றி விமர்சித்துள்ளார் இந்நிலையில் திரு தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் 'சமஷ்டி அமைப்பு' பற்றிக் குறிப்பிடாதது கேள்விக்குரியதே. இதனை அவர் எந்த நோக்கத்திற்குச் செய்திருப்பினும் தமிழர் தரப்பு அதைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது.

கலை, இலக்கிய

# விழிப்புணர்வை பரவலாக்க

# கிரா. மட்டத்தில் நடவடிக்கை

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் தனது வட்டார ரீதியான கலை பண்பாட்டு அவைகள் மூலம் சில கிராமங்களிலும் கலை இலக்கிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய பல புதிய திட்டங்களை செயற்படுத்த உள்ளது.

இதன்படி கிராமங்கள் தோறும் உள்ள இலக்கிய மன்றங்கள், தமிழ்ச் சங்கங்கள், நாடக அமைப்புகள், பண்பாட்டு அவைகள், சனசமூக நிலையங்கள் முதலியவற்றுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

கிராமங்களிலுள்ள மேற் குறிப்பிட்ட அமைப்புக்களூடாக கலைஞர்கள், எழுத்தாளர்கள் சமூகமேம்பாட்டை விரும்பும் அனைவருடனும் உறவை ஏற்படுத்துதல்.

மாதத்தில் இரண்டு வாரத்திற்கொரு தடவை கலை இலக்கிய ஆற்றலை வளர்க்கவும், சமூகச் சிந்தனையை விசாலித்து, இம்மண்ணின் விடுதலைக்கான போராட்ட உணர்வை உருவாக்கவும் கலந்துரையாடல்கள், செய்முறை வகுப்புகள், களப் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை மேற்படி அமைப்புகள் மூலம் கிராமந்தோறும் நடாத்துதல்.

கலை, இலக்கிய அறிவு சார்ந்த படைப்புக்களை உருவாக்குவதற்கு ஊக்கமும் ஊக்கமும் அளித்தல் தமிழீழத்தில் புரையோடிப் போயிருக்கும் மூடத்தனங்களை மெல்ல மெல்ல இல்லாமல் செய்யும் பேணப்பட வேண்டிய பண்பாட்டுக் கோலங்களை கட்டிக் காத்து எம் சமூகக் கட்டுமானம் இடிந்து போகாமல் பேணிப் பாதுகாப்பது போன்ற செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இணைந்து கொள்ள விரும்பும் மன்றங்கள், அமைப்புக்கள், தனிநபர்கள் தங்கள் வட்டாரப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கலை, பண்பாட்டு அவைகள் மூலமாகவோ தங்கள் பிரிவு கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஊடாகவோ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## கிரெம்ளின் அதிகாரங்களை யெல்சின் ஏற்றார்

(மொஸ்கோ)

கிரெம்ளின் சோவியத்வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சுகள் ரகசியப்பொலிஸ் ஏஜென்சியின் கட்டுப்பாட்டை ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் கைவசப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொரிஸ் யெல்சின் இந்த விருப்பு பறப்படுவதற்கு முன்னர் இது தொடர்பான கட்டளைகளில் கைசொப்பமிட்டுள்ளாரென்றும், இவ்வாறு கையொப்பமிட்டதன் மூலம் சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் செவர்னாட்சேயின் தலைமையிலான சோவியத் வெளியுறவு அமைச்சின் கட்டுப்பாட்டைத் தன்வசம் கொண்டுவந்துள்ளாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் செவர்னாட்சேக்கு ரஷ்ய வெளியுறவு அமைச்சில் பதவி அளிக்கப்படலாம் எனரஷ்ய துணைவெளியுறவு அமைச்சர் போரிஸ் குலோகுலோ தெரிவித்துள்ளார். ஆனால் இதுகுறித்த இறுதி முடிவை ரஷ்ய அதிபர் தான் மேற்கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் பத்துக் குடியரசுகளின் தலைவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை கசகிஸ்தான் தலைநகரில் கூடி பொதுநல அமைப்பின் கட்டமைப்புப் பற்றி ஆராயவுள்ளனர்.

இதற்கிடையில் ஜனாதிபதி கொர்பசேவ் சோவியத் யூனியனுக்குப் பதிலாக ஏற்படவிருக்கும் அமைப்பிற்குப் புதிய பெயரை இடும்படி குடியரசுத் தலைவர்களுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர்களுக்கு இவர் எழுதியுள்ள கடிதத்தில் சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பு என்பதற்குப் பதிலாக ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் பொதுநல அமைப்பு என அழைக்க வேண்டும் என யோசனை தெரிவித்துள்ளார்

ஆனால் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் இத்தாலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் "புதிய பொதுநல அமைப்பில் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கு எந்தவிதப் பங்கும் இருக்காது" என்று தெரிவித்துள்ளார்.

**ஊவாவில்**

பேசில்கைது செய்யப்பட்டுள்ள 55 பேரில் 35 பேர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் நிரபராதி என்று கண்ட 20பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

**புலிகளுடன்**

தீப் பேசும் போது அந்நாவுட இதனைத் தெரிவித்தார்.

தமிழகத்தையும் சேர்த்து தமிழீழம் கண முயற்சி எடுக்கப்படடதாகவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொல்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனே உத்தரவிட்டுள்ளதாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன என்று குறிப்பிட்டவர், இதுகுறித்து கவனமாக சிந்திக்க வேண்டும் என்றும்,

'சார்க்' மாநாடு இலங்கையில் நடக்கும் சமயத்தில் நாம் கவனமாக செயற்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**வடக்கு கிழக்கு**

பீடத்திற்கும் தனியான முதலமைச்சர் இருக்கவேண்டும். அமைச்சரவையில் மூன்றில் ஒரு பங்கு இடம் முஸ்லிம்களுக்கு இருக்க வேண்டுமென்பது அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் அஷ்ரப் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தீவக சிற்றூரவை தலைவர்கள் கலந்துரையாடல்

(மண்டைதீவு)

தீவகத்தின் வட்டார, சிற்றூரவைத் தலைவர்கள் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கே. கே. எஸ் வீதியில் அமைந்துள்ள வேலணை ப. நோ. கூ. சங்க தலைமைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் உட்பட விடுதலைப்புலிகள் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (88)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த யாழ். குடாநாட்டின் நீர் வளங்கள் சூழல் பேணுதல் தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் 5.1.92 சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம் பெற்று வரும் வாராந்தக் கருத்தரங்கு நாளை காலை 10.00 மணிக்கு கோண்டாவிலுள்ள கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ் வார அமர்வில் முதுபெரும் எழுத்தாளர் வரதர் அவர்கள் ''எனது எழுத்துலக வாழ்வு'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு மேற்படி கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

## இன்று இறுதிப் போட்டி

(குருநகர்)

கடற்புலிகளினால் மாவீரர் வாரத்தை ஒட்டி நடாத்தப்பட்டுவந்த விலகல் முறை உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இன்று (21-12-91) மாலை 3 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் விடுதலைப் புலிகள் தீவக இணைப்பாளர் திரு. வெற்றி ஆகியோர் கலந்து கொள்வார்கள். (43) 21)

**தடுக்கக்கூடிய**

சுகாதார கல்விக் குறிப்புகளை அடைவதற்கு. ஓர் ஆண்டுக்கு மேலும் இன்டர் ஏராம் கோடி டாலர் தேவைப்படுகின்றது உலக நாடுகள் இந்த தொகையை ஆயுதங்களுக்காக ஒரே வாரத்தில் செலவிடுகின்றன. ஆயுதங்களுக்கு செலவிடப்படும் தொகையில் ஐந்தில் ஒருபங்கை குறைத்துக் கொள்வதன் மூலம், அபிவிருத்திக்கான நிதியுதவியை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும். பிறப்பு விகிதத்தை கட்டுப்படுத்தவும் நடவடிக்கைஎடுக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

**மாவியப்பிட்டி**

(வயது 33) என்ற இளைஞர் படுகாயமடைந்தார். இவர் யாழ் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். 'ஈ.மே'

**1892 நிதி**

உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கருணாகரன் ஆகியோர் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர்

எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி, ஐ. தே. முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களும் த. வி. கூட்டணியைச் சேர்ந்த தவராசசிங்கம், ராஜா, புவனேஸ்வரன் இம்மானுவல் சிவா ஆகியோரும் வாக்களித்தனர்.

